## கடந்த ஜூன் மாதத்தில் மட்டும்

# மெட்ரோ ரயிலில் 4,824 மாணவர்கள் கல்வி பயணம்; நிர்வாகம் அறிவிப்பு

சென்னை, ஜூலை 11-
சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

மெட்ரோ ரயிலை பற்றியும் அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளின் மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் மெட்ரோ ரயில் நிர்வாகம் ஈடுபட்டு வருகின்றது. இதன்படி சென்னை சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை, வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி டி.எம்.எஸ் வழியாக விமான நிலையம் வரை மெட்ரோ ரயிலில் கல்வி பயணம் ஏற்பாடு செய்து அழைத்து செல்லப்படுகின்றனர். கல்விப் பயணங்கள் மாதம்தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மெட்ரோ ரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2018-19ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31,178 மாணவ, மாணவியர்கள் மெட்ரோ ரயிலில் பயணித்து பயன் பெற்றுள்ளனர். 2019-20ம் ஆண்டிற்கான கல்விப் பயணம் 2019 ஜூன் 4 முதல் தொடங்கியது. 2019 ஜூன் மாதத்தில் மொத்தம் 4,284 மாணவர்கள் இந்த கல்விப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.